# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 0639/பேரூ./2016
ஆணை எண்: 089/2017
நாள்: 04/05/2017

திரு. J. ஜான்சன்,
கோலியங்கோட்டு விளை,
கல்லங்குழி–629 166,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. T. சத்தியதாஸ்,
முன்னாள் செயல் அலுவலர்,
வேர்க்கிளம்பி பேரூராட்சி,
(தற்போது செயல் அலுவலர்
தேர்வு நிலை பேரூராட்சி,
சாத்தான்குளம்).

2. S. மாலதி,
செயல் அலுவலர்,
வேர்க்கிளம்பி பேரூராட்சி,
கல்லங்குழி – 629 166.

3. S. ஜோஸ்,
குடிநீர் உடனாளர்,
வேர்க்கிளம்பி பேரூராட்சி,
கல்லங்குழி – 629 166. – எதிர் மனுதாரர்கள்

கன்னியாகுமரி மாவட்டம் வேர்க்கிளம்பி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. J. ஜான்சன், என்பவரின் 01.07.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0639/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், வேர்க்கிளம்பி பேரூராட்சியைச் சேர்ந்த J. ஜான்சன், தனது முறையீட்டு மனுவில், தனது வீட்டிற்கு பக்கத்தில் திருமதி மேரி, க/பெ. முத்துப்பிள்ளை என்பவர் கட்டிட விதிகளை மீறி இரண்டடுக்கு கட்டிடம் கட்டி வருவதாகவும், கட்டடத்தின் சுற்றுப்புறம் போதிய இடைவெளி விடப்படாததால் தனது வீட்டின் சுற்றுச் சுவர் பாதிப்படைவதாகவும், மேலும் ஜோஸ் என்பவரை குடிநீர் திட்ட பணியாளராக நியமித்தது முறைகேடானது என்றும் முறையீடு செய்துள்ளார்.

2. மேற்படி முறையீட்டு மனு மீது வேர்கிளம்பி பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திருமதி. எஸ். மாலதி மற்றும் முந்தைய செயல் அலுவலர் திரு. T. சத்தியதாஸ் அவர்களிடம் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை 639/பே/2016 நாள்: 07.07.2016 மூலம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. அதன்படி மேற்படி இரு செயல் அலுவலர்களும் 22.07.2016 நாளிட்ட விளக்க அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கத்தினை தெரிவித்துள்ளனர்.

> "பேரூராட்சி அலுவலகத்தில் கட்டிட அனுமதிகோரும் அனைத்து விண்ணப்பங்-களையும் நேரில் ஆய்வு செய்து, தகுதியிருப்பின் உடனடியாக வரைபட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. புகாரில் குறிப்பிட்டுள்ள திருமதி. மேரி, க/பெ. முத்துப்பிள்ளை என்பவர் தான் வசித்து வந்த ஓட்டுவீட்டினை இடித்து மாற்றி காங்கிரீட் வீடாக கட்டியுள்ளதை வரிவசூலர் கண்டறிந்து பழைய ஓட்டு வீட்டிற்கான வரியை ரத்து செய்துள்ளார். மேற்படியார் தனது ஓட்டு வீட்டிற்கான வரி செலுத்த வந்தபோது வரி ரத்து செய்யப்பட்டுள்ளதை அறிந்து புதிதாக வரைபடம் வழங்கியுள்ளார். செயல் அலுவலர், மேற்படி கட்டிட வரைபடம் தொடர்பாக இடம் பார்வையிட்டு வரைபடமும், கட்டிடமும் சரியாக இருந்ததால் வரைபட அனுமதி எண் 139/2012-13 நாள்:13.12.2012-ல் உரிய அபராதத்துடன் வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வீடு கட்டி முடிக்கப்பட்டிருந்ததால் 01.03.2013ல் வரிவிதிப்பும் செய்யப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை. மேற்படி கட்டிட அனுமதி தொடர்பாக செயல் அலுவலர் இடம் பார்வையிட்ட போதும், வரிவிதிப்பு செய்யும் போதும் புகார்தாரர் திரு. ஜான்சன்,நேரடியாகவோ, எழுத்து மூலமாகவோ எவ்வித புகாரும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவித்ததாக எவ்வித கோப்பும் அலுவலகத்தில் இல்லை.

புகார்தாரர், தனது காம்பவுண்ட் சுவர் மழையால் இடிந்துள்ளது எனவும், எதிர் மனுதாரரின் பவுண்டேசன் வெளியே தெரிவதாகவும், பூச்சு வேலை செய்யவில்லை எனவும், பேரூராட்சி அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியரிடமும் புகார் தெரிவித்து இரண்டு முறை இடம் பார்வையிடப்பட்டு எதிர்மனுதாரர் அன்னாரின் வீட்டு பவுண்டேசனை பூச்சு வேலை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பூச்சு வேலை செய்யும் பணியில் எதிர்மனுதாரர் ஈடுபட்ட போது மனுதாரர் நிலத்தில் காலை வைக்க கூடாது என பிரச்சனை செய்ததாகவும், மனுதாரர் எதிர் மனுதாரரிடையே உள்ள பகையின் காரணமாக பூச்சு வேலை செய்ய அனுமதிக்கப்படவில்லை என்பதே உண்மை. அலுவலக விதிமுறைகளுக்குட்பட்டு வரைபட அனுமதி வழங்கப்பட்டு வருவதாகவும், அலுவலக பணியாளர் மீது குறிப்பிட்டுள்ள புகாரிலும் எவ்வித உண்மையும் இல்லை" என்று மேற்படி செயல் அலுவலர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி முறையீட்டு மனு குறித்து முறையீட்டு மனுதாரர் 30.8.2016 அன்று நடைபெற்ற விசாரணையின் போது கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்:-

> எனது 08.08.2016 நாளிட்ட முறையீட்டு மனு என்னால் தான் அனுப்பப்பட்டது. அதில் கன்னியாகுமரி மாவட்டம் வேர்க்கிளம்பி பேரூராட்சியில் கட்டட வரைபட அனுமதி வழங்குவதில் நிறைய விதி மீறல்கள் உள்ளது என குறிப்பிட்டு இருந்தேன். எனது வீட்டிற்கு எதிர்வீட்டில் திருமதி மேரி என்பவரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அவர் வீடு கட்டுவதற்கு அனுமதி வாங்கியுள்ளாரா என எனக்கு தெரியாது. வீடு கட்டும்போது விதிமுறைகளுக்கு முரணாக உரிய இடை வெளிவிடாமல் கட்டடம் கட்ட ஆரம்பித்தார்கள் அதோடு கரடு முரடான கற்கள் கொண்டும் சாந்து வைக்காமலும் பூச்சு பூசாமலும் கட்டடம் எழுப்பி உள்ளார்கள். கட்டடம் ஆரம்பிக்கும் போதே அப்போது இருந்த நிர்வாக அலுவலர் திரு. சத்திய தாஸ் அவர்களிடம் 2 முறை மனு அளித்தேன். முதல் மாடி எழுப்பிய உடன் மீண்டும் போட்டோவுடன் நிர்வாக அலுவலரை அணுகினேன். தற்போது உள்ள திருமதி மாலதி என்பவரை அணுகினேன்.

அவர்கள் இருவரும் இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திருமதி மாலதி அவர்கள் நானும் இதுபோன்று தான் அஸ்திவாரம் போட்டுள்ளேன் என்று கூறினார் திரு.ஜோஸ் எனும் வாட்டர் மேன் என்னை கடுமையாக மிரட்டினார். என்னை வெளியே போகச் சொல்லிவிட்டார் நான் பெரிய அதிகாரி என நினைத்து பயந்து வெளியே வந்துவிட்டேன். அவர் செயல் அலுவலருக்கும் தவறான தகவல் அளித்து வழக்கு நிலுவையில் உள்ளதாக பொய் சொல்லி திருமதி மேரி அவர்களுக்கு சாதகமாக செயல்படுகிறார். நான் இத்துடன் என்னுடைய எழுத்து பூர்வமான வாக்கு மூலமாக இன்று 9 பக்கமும், சான்று ஆவணங்களாக 19 பக்கமும் போட்டோ உட்பட அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கிறேன். அதை என்னுடைய வாக்குமூலமாக எடுத்துக் எனக்கு இதில் நியாயம் கிடைக்குமாறு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். திருமதி மேரி தனது வீட்டிற்கு கிழக்கே பொதுப் பணிதுறை நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். அதனால் அந்த பகுதியில் செங்கல் சிமெண்ட் போன்ற பொருட்கள் கொண்டு செல்ல தடையாக உள்ளது. வார்டு மெம்பரும் தான் பதவியில் இருக்கும் வரை இதை எடுக்க அனுமதிக்க மாட்டேன் என திருமதி மேரி பக்கமே செயல்படுகிறார். பொதுப்பணித்துறை நிலத்தை மேரி ஆக்கிரமிப்பு செய்த போது நானும் சிலரும் மனு கொடுத்தோம் அதற்கு செயல் அலுவலர் திரு சத்தியதாஸ் பொதுப் பணித்துறையினரே அனுமதி வழங்கிவிட்டார்கள் வேறு ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிவிட்டார்கள்.

4. இந்நிலையில் முறையீட்டு மனுதாரது புகார் மனுவிலும் செயல் அலுவலரின் அறிக்கைகளிலும் குறிப்பிட்டுள்ள இனங்கள் தொடர்பாக தல ஆய்வு அவசியம் என இம்முறைமன்ற நடுவம் கருதி நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களை பொறுப்பாக்கி, தல ஆய்வு செய்து அறிக்கை அனுப்பிட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை 639/TPT/2016 நாள்:04.08.2016ல் ஆணையிடப்பட்டது. அதன்படி நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 21.10.2016 நாளிட்ட கடிதம் வாயிலாக இம்முறை மன்றத்திற்கு தனது தல ஆய்வறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:-

"தல ஆய்வின் போது வேர்க்கிளம்பி பேரூராட்சியின் முன்னாள் / அப்போதைய செயல் அலுவலர் திரு. தை. சத்தியதாஸ், தற்போதைய செயல் அலுவலர் திருமதி. சி. மாலதி, ஆகியோர் உடன் இருந்தனர். புகாரில் தெரிவிக்கப்பட்ட வேர்க்கிளம்பி பேரூராட்சியின் குடிநீர் திட்டபணியாளர் திரு. ஜோஸ், புகார்தாரர் திரு. ஜோ. ஜான்சன், மற்றும் பக்கத்து வீட்டு உரிமையாளர் திருமதி. மேரி ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். புகார் மனுதாரர் மற்றும் அருகில் உள்ள வீட்டு உரிமையாளர் ஆகியோருக்கிடையேயான இடம் தொடர்பான தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இப்புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு வீட்டிற்கும் இடையே உள்ள சுற்றுச்சுவர் இருவரும் தனக்குரியது என்று கூறினார்கள். திரு. ஜோ. ஜான்சன் என்பவரின் வீட்டை சுற்றியுள்ள சுவர் 33 மீட்டர் நீளம் உள்ளது. திருமதி. மேரி என்பவரின் வீட்டுச் சுற்றுச்சுவர் 7.25 மீட்டர் நீளம் உள்ளது. திருமதி. மேரி தனது பட்டா நிலத்தில் கட்டிடம் கட்டியுள்ளார். 6 ஜன்னல்கள் திரு. ஜோ. ஜான்சன் வீட்டிற்கு நேராக அமைத்துள்ளார். இரு வீட்டிற்கும் இடையே உள்ள சுற்றுச்சுவர் கைப்பிடி சுவர் உரிமை தொடர்பாக இருவர்களுக்கிடையே எனது முன்னிலையிலும் வாய்த்தகராறு ஏற்பட்டது. மேலும் புகார்தாரர் அவருடைய இடத்தின் வழி செல்ல அனுமதி அளித்தால் மட்டுமே மேற்படி அருகில் உள்ள வீட்டு உரிமையாளர் பிரச்சனைக்குரிய சுவரினை பூசி ஒழுங்குப்படுத்த இயலும். புகார் மனுதாரர் வீட்டின் சுற்றுச்சுவருக்கும் அருகில் உள்ள வீட்டு உரிமையாளர் வீட்டிற்கும் இடை-வெளியில்லாமல் வீட்டு சுவர் கட்டப்பட்டது தொடர்பான இப்பிரச்சினையை

வருவாய்த்துறை மூலம் நிலத்தை அளந்து எல்லை குறிப்பிட்டு தீர்த்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். புகார் மனுதாரர் தெரிவித்துள்ளது போல இடைவெளி விட்டு வீடு கட்டுவது என்ற விதி ஏற்கனவே அமைந்துள்ள தொடர்ச்சியான குடியிருப்பு பகுதிக்கு (Row of house) பொருந்தாதது ஆகும்.

எனவே தனிநபர்களுக்கு இடையேயான இந்த பிரச்சினையில் கட்டிட அனுமதி வழங்கிய பேரூராட்சியின் செயல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது தேவையற்ற பொய்யான புகார்கள் மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ளது என கண்டறியப்பட்டது. வருவாய்த்துறை மூலம் நிலத்தை அளந்து எல்லை குறிப்பிட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண தல ஆய்வின் போது மேற்படி இரு நபர்களுக்கும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் பேரூராட்சியின் குடிநீர் திட்ட பணியாளர் மீது சுமத்தப்பட்டுள்ள புகார் உண்மைக்கு புறம்பான ஒன்று என்றும் இப்பணியாளர் கூற்றின்படிதான் கட்டிட அனுமதி வழங்கப்படுகிறது என்பதும் உண்மையல்ல. இது புகார்தாரர் மற்றும் இக்குடிநீர் திட்டப் பணியாளரது தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் காரணமாக கற்பனையாக தெரிவிக்கப்பட்டுள்ளது" என்று அறிக்கை அளித்துள்ளார்.

5. மேற்கூறிய நிலையில், முறையீட்டு மனுதாரர் மற்றும் அருகில் உள்ள வீட்டு உரிமையாளர் ஆகியோர்களுக்கிடையேயான இடம் தொடர்பான தனிப்பட்ட பிரச்சனை காரணமாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் முறையீட்டு மனுதாரர் வீட்டைச் சுற்றியுள்ள சுவர் 33 மீட்டர் உள்ளதாகவும் அருகில் உள்ள வீட்டு உரிமையாளர் வீட்டுச் சுற்றுச் சுவர் 7.25 மீட்டர் உள்ளதாகவும் அருகில் உள்ள வீட்டு உரிமையாளர் தனது பட்டா நிலத்தில் கட்டிடம் கட்டியுள்ளார் என்றும் அறியப்படுகிறது. மேலும் முறையீட்டு மனுதாரர் அனுமதி அளித்தால் மட்டுமே பிரச்சனைக்குரிய சுவரை பூசி ஒழுங்குப்படுத்த முடியும் என்பதையும் இப்பிரச்சனையை வருவாய்துறை மூலம் எல்லைக் குறிப்பிட்டு தீர்த்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும் என்பதையும் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளது போல இடைவெளிவிட்டு வீடு கட்டுவது தொடர்ச்சியான குடியிருப்பு பகுதிக்கு பொருந்தாத ஒன்று என்பதையும் நாகர்கோயில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிக்கையின் வாயிலாக கண்டறியப்படுகிறது. எனவே, இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார் குறித்து செயல் அலுவலர் விளக்க அறிக்கை, பேரூராட்சி உதவி இயக்குநர் தல ஆய்வு அறிக்கை மற்றும் அறிக்கையுடன் பெறப்பட்ட புகைப்பட நகல்கள் ஆகியவற்றினை பரிசீலனை செய்திடும் போது முறையீட்டு மனுதாரர் தனது இட பிரச்சினையை வருவாய்த் துறை மூலம் எல்லை குறிப்பிட்டு தீர்த்துக்கொள்ள வேண்டிய ஒன்று என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. பேரூராட்சி அலுவலர் மீது கூறப்பட்ட முறையீட்டிற்கு போதிய ஆதாரங்கள் ஏதும் சமர்ப்பிக்காத நிலையில் செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிக்கைகளை ஏற்று, அம்முறையீடு போதிய ஆதாரமற்றதாக கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மே திங்கள் 4–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

1. திரு. J. ஜாண்சன்,
கோலியங்கோட்டு விளை,
கல்லங்குழி–629 166,
கன்னியாகுமரி மாவட்டம்.

2. T. சத்தியதாஸ்,
முன்னாள் செயல் அலுவலர்,
வேர்க்கிளம்பி பேரூராட்சி,
(தற்போது செயல் அலுவலர்
தேர்வு நிலை பேரூராட்சி,
சாத்தான்குளம்).

3. S. மாலதி,
செயல் அலுவலர்,
வேர்க்கிளம்பி பேரூராட்சி,
கல்லங்குழி – 629 166.

4. S. ஜோஸ்,
குடிநீர் உடனாளர்,
வேர்க்கிளம்பி பேரூராட்சி,
கல்லங்குழி – 629 166.

உதிரி - 5